# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2097/49 - 2018 නොවැම්බර් මස 16 වැනි සිකුරාදා - 2018.11.16

*2097/49 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 16 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

***1973 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, விளையாட்டுக்கள் சட்டம்***

*32 மற்றும் 33 ஆம் இலக்க பிரிவுகளின் கீழான பணிப்புரை*

மாகாண சபைகள், உள்ளூராட்சி மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் பைசர் முஸ்தபா ஆகிய நான், 1973 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க விளையாட்டுக்கள் சட்டத்தின் இலக்கம் 32(ஆ) மற்றும் 33 ஆகிய பிரிவுகளின் கீழ் எனக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் அடிப்படையில் நீர் விளையாட்டுக்கள் தொடர்பான தேசிய சங்கமான இலங்கை நீர் விளையாட்டுக்கள் சங்கத்தின், பதிவினை உடன் அமுலுக்கு வரும் வகையில் இடைநிறுத்துவதுடன், தற்காலிக செயலொழுங்காக அங்கு நீர் விளையாட்டுக்கள் சங்கத்தின், பணிகளை மேலும் நடாத்திச் செல்வதன் பொருட்டு கீழ்க் குறிப்பிடப்படும் இடைக்கால கட்டுப்பாட்டுச் சபையினை நியமனஞ் செய்கின்றேன்.

1. திரு. எஸ். ஆர். டபிள்யூ. எம். ஆர். பீ. சத்குமார - (தலைவர்)
2. திரு. அசேன் பிரனாந்து - (அங்கத்தவர்)
3. திரு. டபிள்யூ. பியல் ஹேவகே - (அங்கத்தவர்)

மேலும், இலங்கை நீர் விளையாட்டுக்கள் சங்கத்தின், உத்தியோகத்தர் தேர்தலுக்காக அழைப்பு விடுத்தல் மற்றும் நடாத்துதல் தொடர்பாக, 2018, செத்தெம்பர் மாதம் 22 ஆந் திகதி பிரசுரிக்கப்பட்ட 2089/56 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியின் அறிவித்தலுக்கு ஏற்ப தேர்தற் குழுவினை நியமனஞ் செய்து தேர்தலினை நடாத்துவதன் பொருட்டு அவசியமான முன்னோக்கிய பணிகளை மேற்கொள்வதன் நிமித்தம் விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் அவர்களை 2018, நவெம்பர் மாதம் 16 ஆந் திகதியிலிருந்து உரிய அதிகாரம் பொருந்தியவராக நியமனஞ் செய்கின்றேன்.

பைசர் முஸ்தபா (சனாதிபதி சட்டத்தரணி),
மாகாண சபைகள், உள்ளூராட்சி மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர்.

மாகாண சபைகள், உள்ளூராட்சி மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சு,
கொழும்பு,
2018, நவெம்பர் 16.

*11-1398*


1A-G 28974 — 12 (2018/11) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*